4144

MADURA TAMIL

உ

ஓம்.

ஸ்ரீசற்குருவே துணை.

# ஸ்ரீகட்டிக்குளம் சுவாமிகளென வழங்கும்
# சூட்டுக்கோல்மாயாண்டி சுவாமிகள்
# சரித்திரமும்,
# பதிகமும், கிளிக்கண்ணியும்.

சுவாமிகளின் சரித்திரம்
அவர்களது பாதசேகருளொருவரான,
மதுரை ரிட்டயர்ட் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்
**R. செல்லம் பிள்ளை அவர்களாலும்,**

பதிகமும், கிளிக்கண்ணியும்,
மாரியப்பசுவாமி அவர்களாலும்
இயற்றப்பெற்று

கோனுபட்டு,
மூ. பெரி. வீர. அழகர்சாமி வேளார்,
மதுரை, தெற்காவணிமூல வீதி,
அ. சு. ச. மீ. சோமசுந்தரம் செட்டியார்
ஆகிய இவர்கள் நன்முயற்சியால்

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றன.

ரைட்] 1931. [ரிஜிஸ்டர்ட்.

உ

ஓம்.

ஸ்ரீசற்குருவே துணை.

# ஸ்ரீகட்டிக்குளம் சுவாமிகளென வழங்கும் சூட்டுக்கோல்மாயாண்டிசுவாமிகள் சரித்திரமும், பதிகமும், கிளிக்கண்ணியும்.

சுவாமிகளின் சரித்திரம்

அவர்களது பாதசேகாருளொருவரான,

மதுரை ரிட்டயர்ட் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்

**R. செல்லம் பிள்ளை அவர்களாலும்,**

பதிகமும், கிளிக்கண்ணியும்,

மாரியப்பசுவாமி அவர்களாலும்

இயற்றப்பெற்று

கோணுபட்டு,

மூ. பெரி. வீர. அழகர்சாமி வேளார்,

மதுரை, தெற்காவணிமூல வீதி,

அ. சு. ச. மீ. சோமசுந்தரம் செட்டியார்

ஆகிய இவர்கள் நன்முயற்சியால்

மதுரை, மீனலோசனி அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றன.

காப்பி ரைட்] 1931. [ரிஜிஸ்டர்ட்.

நூல் அன்பளிப்பு
தமிழக வேளாண்மைத் துறை
அமைச்சர் மாண்புமிகு
கா. காளிமுத்து, எம்.ஏ.,

ஸ்ரீ கட்டிக்குளம் சுவாமிகள் என்னும்
சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்.

உ

ஸ்ரீ சற்குருவே நம:

# ஸ்ரீ கட்டிக்குளம் சுவாமிகளென வழங்கும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் திவ்ய சரித்திரம்.

பூலோகத்தில் சிறப்புற்றோங்கியது பாதகண்ட மென்னும் இந்தியா தேசம். இதில் திலகமாய் விளங்குவது தமிழ்நாடு. இப் பெருமை வாய்ந்த தமிழ்நாடுகளில் பராசத்தியாகிய ஸ்ரீ மீனும்பிகை யும் பரமேஸ்வரனை ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளும் உக்கிரபாண்டிய னென்ற முருகக் கடவுளும் முறையே செங்கோல் செலுத்திய தெய் வீகத் தன்மையுடையதும், சிவபெருமான் அன்பர்களுக் கனுக்கிரகிக் கும்பொருட்டு அறுபத்துநான்கு திருவிளையாடல் வியற்றப்பெற்றதும், மூர்த்தி ஸ்தலம் தீர்த்தம் ஆகிய மூவகை விசேடங்களான் மிக்கதும் பிறக்கமுத்தி, இருக்கமுத்தி, இறக்கமுத்தி என மும்முத்தி மகத் துவம் பொருந்தியதுமான செந்தமிழ் பாண்டிவளநாட்டில் வைகை யாற்றங்கரையில் சமய குரவர்களால் பாடல்பெற்ற திருப்பாச்சேத்தி என்னும் ஸ்தலத்துக்கு தென்புரம் கட்டிக்குளம் என்னும் ஓர் ஊர் உளது. அவ்வூரில் அகண்ட பரிபூரண சச்சிதாநந்த சிவசொரூபமே உலகத்தேயுள்ள சர்வான்மாக்களும் உய்யும்பொருட்டு மானிடச் சட்டை சாத்திச் சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள் என யாவரும் கொண்டாடுமாறு பரமயோகியாய் திருக்கோலங்கொண்டுவீற்றிருந்து எண்ணிலாத அரியசித்திகளை எளிய திருவிளையாட்டாக யாவருங் கண்டதிசயிக்கச் செய்து தஞ்சாவூர்ஜில்லா ராஜமன்னார்குடியில் நிருவி கற்ப சமாதியடைந்த பெருமையை தமிழ்நாடு நன்கறிந்ததேயாகும்.

அப்பெருமான் வீற்றிருந்த திருப்பதியாகிய கட்டிக்குளம் கிராம த்தில் குலாளர் குலத்தில் குப்பமுத்து வேளார் என்ற பிச்சைவேளா ருக்கும் அவரது மனைவியார் கூத்தாயி அம்மாளுக்கும் அந்த அம் மாள் மேற்படி பெருமான் சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள் திரு வருட் பிரசாதம் பெற்ற மகிமையால் சேஷ்ட புத்திரனுகக் காளயுக்தி வருஷம் ஆடி மாதம் சதுர்த்தசி அன்று கட்டிக்குளம் சுவாமிகளென வழங்கும் சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள் அவதரித்தார்.

அவர் இளமைப்பருவத்திலே கல்விகற்று தேர்ச்சி அடைந்தார். அவர் கல்வி பயிலும் காலத்தில் பள்ளிக்கூடத்துக்கு ஒரு பெரியார் வந்து அவர் அன்று பாடம்படித்துக்கொண்டிருந்த சுவடியை வாங்கிச் சில அக்ஷரங்களை எழுதிக்கொடுத்து அவரைப் பாடம் பண்ணும்படியாகக் கட்டளையிட்டருளினார். அதன்படியே அவரது கட்டளையைச் சிரமேற்கொண்டு அதைத்தியானம் செய்து வருபவரானார். அவருக்கு 12-வது வயதில் அவரது தந்தை உபநயனம் செய்வித்தார். கல்விச் சாலையிலிருந்து கல்வி கற்றதும் தங்கள் கிரகத்திலுள்ள பரம்பரை வைத்தியச்சுவடிகளையும், சித்தர் நூல் முறைகளையும் ஆராய்ச்சிசெய்து கொண்டு வந்தார். தங்கள் குலத்தொழிலாகிய நவபாண்ட வேலையையும் பழகி அதில்வரும் ஊதியத்தைத் தங்கள் குடும்ப சவரக்ஷணைக்கும், அடியார்களுக்கும் அமுதளிப்பதிலும் செலவுசெய்துகொண்டுவந்தார்.

சைவசித்தாந்தநெறியில் மிகுதியும் பற்றுடையவராய், சிவாகம முறைப்படி நடந்து வந்தார். தங்கள் குலதெய்வமாகிய அரிகர புத்திர மகா சாஸ்தாவைத் தனது நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு நாள்தோறும் காலை மாலை சிரத்தா பத்தியுடன் பூஜித்து வந்தார். அடிக்கடி மதுரைபோய் மீனாக்ஷிசுந்தரேசுவரருக்கு நடைபெறும் அர்த்தயாம பூஜையையும் திருவனந்தல் பூஜையையும் தரிசனம் செய்து வருவார். தங்கள் முன்னோர்களால் எழுதப்பெற்றுள்ள சுவடிகளிலிருந்து அஷ்டமாசித்திக்குள்ள மந்திரங்களை உருச் செபித்து சித்தியடைந்தார். அவர் ஐயனார் கோவிலில் பூஜை செய்யும் காலத்தில் சர்ப்பம் அவர் மேலிலும் ஐயனார் மேலிலும் விழுந்து விளையாடும். இதை அங்குள்ளோர் கண்டுபயந்தும் அதிசயித்தும் அவரைப் போற்றியு மிருக்கிறார்கள்.

அவர் யௌவன பருவமடைந்ததும் அவரது பெற்றோர் அவருக்குப் புளியங்குடியில் தங்கள் மரபில் உதித்த உத்தமியாகிய மீனாக்ஷியம்மாளை விவாகம் செய்தார்கள். அது முதல் இல்லற தர்மங்களைச் சரியாய் நடத்திவந்தார். மக்கட்பேறு குறித்து அரிய விரதானுஷ்டான முதலியவற்றைச் செய்தும் இராமேச்சுவரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப்போய் தரிசனை செய்தும் ஒருபுத்திரியையும் ஒரு புத்திரனையும் பெற்றார். தீர்த்த யாத்திரையும், ஸ்தல யாத்திரையும்

செய்வதில் மிகுந்த பற்றுடையவரா யிருந்தார். பழநியாத்திரைசெய்யப் பணமில்லாதுகண்டு தமது பத்தினியார் தான் அணிந்திருந்த கழுத்து ஆபரணத்தை விற்றுக்கொடுத்து யாத்திரை செய்துவரும்படி செய்தார்கள். குருலிங்க சங்கமபக்திகள் அவரிடம் சிறந்து விளங்கிற்று. இகபரத்துக் குரிய சாதன சதுஷ்டியங்களை இடைவிடாது அநுஷ்டித்து வந்தார்.

அப்படி நடந்துவரும் நாளில் சற்குருவைநாடி உபதேசம் பெற வேண்டிய வழிகளில் கண்ணும் கருத்துமா யிருந்துவந்தார். அவரது ஊரில் சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள் கோவில்கொண் டெழுந்தருளி யிருக்கிறபடியால் அங்கு இராமேசுவரம் செல்லும் யாத்திரை வாசிகளும் சாதுக்களும் தரிசனைக்குவரும்பொழுது அவர்களுக்கு அறுசுவை உணவு அளித்தும் அடியார்களுக்குவேண்டிய பணிவிடை செய்தும் பெரியோர்கள் அருட்பிரசாதம் பெற்றும் வந்தார். அப்படியிருக்குங்காலையில் தஞ்சாக்கூரில்பிறந்த செல்லப்பசுவாமிகள்என்பவர் சூட்டுக் கோல் இராமலிங்க சுவாமிகளையே குருவாகக்கொண்டு உபதேசம் பெற்று நிஷ்டாபரராய் விளங்கிக்கொண்டு சிலநாள் இராமநாதபுரம் பக்கமும் திருச்சுளிபக்கமும் சஞ்சாரசமாதி செய்துகொண்டும் அரிய சித்திகளைச் செய்தும் ஒருநாள் இராமநாதபுரம் கண்மாய் மடக்குழியில் இச்சுவாமிகள் இறங்கினவர்கள் காணாதுகண்டு எல்லோரும் விசனிக்க சுவாமிகள் ராஜா அரண்மனை வாசலிலிருந்து ராஜாவிடம் அவர் நோய்க்குரிய பச்சிலை மருந்துகொடுக்க அதை எல்லோருங்கண்டு அதிசயித்தும் அன்றுமுதல் இராமநாதபுரம் ராஜா முத்துராமலிங்க சேதுபதியவர்களால் கொண்டாடப்பட்டும் வந்தார். ஷை சுவாமிகளிடத்தில் மாயாண்டி சுவாமிகள் மிக்க அன்புபூண்டு தொண்டு புரிந்து வந்து அவர்களையே குருவாகக் கொண்டார். இவரதுதொண்டுக்கு அவர் மனமுவந்து இவர் உஜ்ஜீவிக்கும்பொருட்டு, கிருபாநோக்கத்துடன் நிஷ்டாநுபூதியை அப்பியாசிக்கும்படி அருள் புரிந்தார்.

அவ்வாறே குருமொழியை பலையிலக்காக்கொண்டு அப்பியாசம் செய்துகைவல்யமானார். பின் அவர் நிஷ்டையை சிலகாலம் பூஜைசெய்யும் ஐயனார்கோவில்களிலேயே சாதித்தும் சிலகாலம் வீட்டுக்குவராமல் வெளிப்பக்கங்களிலே நிஷ்டை செய்துகொண்டும் ஆத்மவிசாரணையிலேயே மேலிட்டவராயிருந்தார். அப்படியிருக்குங் காலத்தில்

பெற்றோர்கள் பலமுறைதேடியும் காணாமையால் அவரிடத்தில் வெறுப்புற்றார்கள். அதுகண்டு அவர் துறவுபூண்டு ஏகாந்தவாசஞ்செய்ய எண்ணிப் புறப்பட்டார். அவரை வெளியேற விடாமல் அவரது உறவினர் முதலியவர்கள் அவர்பால் சென்று தடுக்கமுயற்சித்து அவரது உடையைக் கைப்பற்றி இழுக்கும்போது உடையையும் கவனியாது விட்டு நிர்வாணியாகத் துறவுபூண்டு கோட்டாறு, சுசேந்திரம், கன்னியாகுமரி, பொதிகை முதலிய ஸ்தலங்களிலும் மலைகளிலும், மலைப்பிரதேசங்களிலும் சஞ்சாரசமாதி செய்துகொண்டிருந்தார்.

தமது குருநாதன் கட்டளைப்படி அவருடன் சிலநாளிருந்தார். அக்குருநாதன் உத்திரகோசமங்கையைச் சேர்ந்த எக்ககுடியில் நிருவிகற்பசமாதி யடைந்தார். அவருக்கு செய்யவேண்டிய குருபூஜை முதலியவைகளை இவர்முடித்தார். பின்பு சிவகங்கை இராமநாதபுரம் முதலிய இடங்களில் சஞ்சரித்தும் இராமநாதபுரம் ராஜா பாஸ்கர சேதுபதி யவர்களால் கொண்டாடப்பட்டும் அவரது வேண்டுகோட்படி இராமேஸ்வரத்திலும் சிலநா ளிருந்தார். பின்பு மதுரை வந்து திருப்பரங்குன்றத்திற்குச் சமீபத்திலுள்ள திருக்கூடல் மலைக்கு அடிக்கடி போய்ச் சஞ்சாரஞ் செய்தும் சித்தர்களுடன் கலந்தும் சௌமிய ௵ பங்குனி மாதம் சூரசம்மார தினத்தன்று இரவு 9 மணிக்கு சுவாமிகள் விளாச்சேரி இ. பெரியசாமி உபாத்தியாயர், விராட்டிபத்து பொன்னையசுவாமிகள் முதலியவர்களுடன் திருப்பரங்குன்றம் போய்ச் சரவணப்பொய்கை ஈசான்யப் படித்துறையில் இரவு முழுவதும் தங்கி மறுநாட் காலையில் அங்கே ஸ்நானம் செய்து பொய்கையில் மண்ணெடுத்து லிங்கமாக வைத்துப் பூஜித்து அதை எடுத்து வந்து கூடல் மலை மேல்பக்கம் குகையில் வைத்துப் பூஜித்து அங்கே சஞ்சார சமாதி செய்துகொண்டிருந்தார். அடிக்கடி ஆரப்பாளையம் கோரிப்பாளையம் போய்வருவது முண்டு. அப்படிப் போய் வரும் காலையில் புட்டுத்தோப்பு சாமியார் மடத்தில் குருபூஜை நடந்த காலத்தில் கட்டங்குடி செட்டி சுவாமிகளென வழங்கும் வேலு சுவாமிகளும் மூக்கைய சுவாமிகளும் அங்கிருந்து குருபூஜை உணவருந்தும்போது இவர் மூக்கைய சுவாமிகள் தலையில் ஓர் குவளையிலிருந்த ஜலத்தை விட அவர் அதை இரண்டு கைகளினாலும் பிடித்துப் பருகினார். அன்று முதல் சுவாமிகளை அவர் குருவாகக் கொண்டார்.

இப்படியிருக்கும்போது மதுரை வடக்குமாசிவீதி தாளமுத்துப் பிள்ளை சந்திலிருக்கும் கருப்பணக்கோனார் மகன் இருளப்பக்கோனார் என்பவர் சன்மார்க்க நடையுடன் அரிய தான தர்மங்களும் தீர்த்த யாத்திரைகளும், ஸ்தல யாத்திரைகளும், நந்தவன கைங்கரியங்களும், செய்து கொண்டும் சற்குருவையடைய வேண்டுமென்னும் வேட்கையுற்றிருந்தார். அதுகண்டு இவரது உறவினரான மூக்கைய சுவாமிகள் இவர்பால் சென்று, 'ஓர் பெரியார் திரிகாலஞானி ஆரப்பாளையம், கோரிப்பாளையம் திருப்பரங்குன்றம் கூடல்மலை முதலிய இடங்களில் சஞ்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களைப் போய்த் தரிசி' என்று கட்டளையிட்டார். அவரது கட்டளையைச் சிரமேற்கொண்டு சுவாமிகளைத் தேடிப்போய் கோரிப்பாளையத்தில் கண்டு தரிசிக்கலானார்.

அன்று முதல் அவருக்குத் தொண்டு புரிவதிலும் அவருடைய கருத்துப்படி நடப்பதிலும் சதா கண்ணும் கருத்துமாயிருந்து வந்தார். அப்போது இவருக்கு ஓர் புத்திரனும் ஓர் புத்திரியும் ஏற்பட்டிருந்தார்கள். அதற்குப் பின் இவர் தன் மனைவி முதல் மங்கையர்களைத் தாய்போல் பாவிக்கும்படி சுவாமிகள் கட்டளையிட அக்கட்டளைப்படியும் நடப்பவரானார். சுவாமிகள் கட்டளைப்படி சாதாரண வரு சித்திரை மீ 1 உ யன்று இவர் ஓர் பிள்ளையார் சிலாவிக்கிரகம் கொண்டுபோய் சுவாமிகளிடம் கூடல்மலைக் குகையில் கொடுக்க அவர்கள் வாங்கி அங்கே பிரதிஷ்டை செய்து பூஜித்தார்கள். பின் சுவாமிகளது கட்டளைப்படி வைகாசிமாதம் விசாகத்தன்று இவர் தண்டபாணி விக்கிரகத்தை கூடல்மலைக்குக் கொண்டுவர சுவாமிகள் அங்கே மலைஉச்சியில் தண்டபாணி கோவிலில் பிரதிஷ்டை செய்தார்கள். சுவாமிகள் கட்டளைப்படி ஆவணிமாதம் விநாயகசதுர்த்திக்குப் பின் மூன்றாம் நாள் இவர் மலையைச்சுற்றிப் பிள்ளையார் ரத உற்சவம் நடத்தினார். பின் சுவாமிகளது கட்டளைப்படி இவர் ஆனந்த வரு ஆவணிமீ உற்சவ தண்டாயுதபாணி தயாரித்து மதுரையிலிருந்து மயில்வாகனத்தின்மீது புறப்பாடு செய்வித்துவர சுவாமிகள் கூடல்மலை தண்டபாணி கோவிலில் பிரதிஷ்டை செய்தார்கள். பின் சுவாமிகள் கட்டளைப்படி இவர் நளவரு சூட்டுக்கோல் இராமலிங்க விலாசமும் அதற்கு வடபக்கம் கிணறும் பிங்கள வரு மொட்டையரசு திருக்கண் மண்டபமும் கட்டி முடித்தார்கள்.

விரோதிகிருது ௵ தை மாதம் கிருத்திகை யன்று சௌந்தரநாயகி என்ற கருவனூர் தெய்வானை ஆச்சி கூடல் மலையில் வந்து சுவாமிகளைத் தரிசித்துத் தொண்டுபுரிந்து சுவாமிகள் கட்டளைப்படி மொட்டையரசில் நந்தவனமும் திருக்கண்மண்டபமும் கட்டினார்கள். சுவாமிகள் கட்டளைப்படி மேலக்கால் மலையாண்டி வேளார் மகன் மலையாண்டிவேளார் மலை வடபக்கம் குகையில்ஸ்ரீநிவாசப் பெருமாள் மண்டபம் கட்டினார். காளையாமங்கலம் அழகப்ப வேளாரால் சுவாமிகள் கட்டளைப்படி மலைஅடிவாரம் வடமேற்குப் பக்கம் கல்மண்டபம் கட்டி லக்ஷ்மிநாராயணப் பெருமாள் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆரப்பாளையத்தில் வேளார்களால் சுவாமிகள் கட்டளைப்படி சுமார் 10 வருஷங்களுக்கு முன் ஊருக்கு மேல்புறம் கோவில் கட்டிச் சிவலிங்க பிரதிஷ்டையும் காசிக்கங்கை என்ற தீர்த்தக் கிணறும் கட்டி முடிக்கப்பட்டது. ஷை ஊருக்குக் கீழ்புறம் துரைப்பிள்ளை என்ற பெரியசாமி பிள்ளையால் சுவாமிகள் கட்டளைப்படி மண்டபமும் கிணறும் கட்டி மண்டபத்தில் கணேசர், சுப்பிரமணியர் பிரதிஷ்டை செய்யப்பட்டது. கோரிப்பாளையத்து மடத்தில் பாண்டியகுலாளர்களால் சுவாமிகள் கட்டளைப்படி கணேசர், பழநியாண்டவர், காசிலிங்கம் முதலிய பிரதிஷ்டைகள் செய்யப்பட்டது. மடத்துக்குக் கீழ்புறம் கூடல்மலைப் பெருமாளுக்கும் கள்ளழகருக்கும் திருக்கண் மண்டபம் கட்டப்பட்டது.

மாரி நாட்டில் ஒருவருக்கும் தெரியாமல் புதைந்து கிடந்த சிவன் கோயிலையும், அம்மன் கோயிலையும் சுவாமிகள் வெளியாக்கிக் காட்டிக் கும்பாபிஷேகம் முதலியன செய்வித்து பிராமணபூஜை நடந்தேறி வரும்படியும் செய்தார்கள். புதுக்கோட்டையில் மிருதங்கம் தெக்ஷிணாமூர்த்திப் பிள்ளையவர்கள் சுவாமிகள் கட்டளைப்படி பழநியாண்டவர் கோவில் ஏற்படுத்தி நித்திய பூஜை குருபூஜை முதலியன நடந்தேறி வருகிறது. தவிரவும் சுவாமிகள் சஞ்சாரம் செய்த ஊர்களில் அவர்களது கட்டளைப்படி அவ்வூர்களிலுள்ள அன்பர்கள் மடங்களும் கூடல்மலைப் பெருமாளுக்குத் திருக்கண்களும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

சுவாமிகள் கட்டளைப்படி க. இருளப்பக் கோனாரவர்கள் ஆண்டுதோறும் ஆடிப் பௌர்ணமியில் கூடல்மலைப் பெருமாள் மானாமதுரை வரை உலாப்போந்து வரும் பக்ஷ விழாவும், பங்குனித் திருவிழாவில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமிகள் திருக்கல் யாணத்தன்று தண்டபாணி உற்சவமூர்த்தி மலையின் மேலேயிருந்து அடிவாரத்திற்கு வந்து இரதோத்ஸவத்தன்று திருப்பரங்குன்றம் உலாப்போந்தும், மறுநாள் மலையின்மேலெழுந்தருளும் உத்ஸவமும், ஷை பங்குனித்திருநாளிலேயே மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரருக் குச் செய்யும் மண்டபவிழாவும், வைகாசி விசாக மொட்டையரசுத் திருநாளில் ஒரு மண்டப விழாவும், மாதக்கார்த்திகை தோறும் பிரா மண போஜனமும், அடியார்களுக்கு அமுதளித்தும், அன்றிரவு கூடல்மலைத்தண்டாயுதபாணி மயில்வாகனத்தில் எழுந்தருளப் பெறு தலும் செய்வித்து நடத்திவருகிறார்கள்.

இப்படி சுவாமிகள் நாடெங்கும் போற்றும்படியாக பல ஆலயங் களையும், மடங்களையும் ஆங்காங்கு நிறுவி அடியார்களுக்குப் பசி யாற்றி அன்புடைய மக்களெல்லாம் உய்யத் திருவருள்பாலித்தும் அருளுருப் பெற்றுவந்த தென்னாட்டுச் சித்தராய் விளங்கினார்.

க. இருளப்பக்கோனார் சுமார் 12 வருஷங்களுக்கு முன் தனக்கு ஆயுள் முடிவென்றும், அதற்குக் காசியில் போய் தக்க பரிகாரம் செய்தால் ஆயுள் விர்த்தியாகலாமென்றும் ஜாதகரூபமாய்த் தெரிந்து மூபற்சிக்க சுவாமிகள் கருப்பணேந்தல் மடத்திலே அவரை ஒரு மண்டலம் இருத்தித் தான் அந்த ஒரு மண்டலமும் படுத்த இடையா யிருந்து அவஸ்தையடைந்து பின்னர் ஓர் குழி வெட்டச்சொல்லி அதில் ஒரு நாள் தான் இருந்து வெளியேறி அக்குழியை மூடச் சொல்லி, சமாதுமாதிரி போடச்செய்து குரு பூஜை நடத்தி, பின் க. இருளப்பக்கோனாரைப் பார்த்து சரீரத்துக்கு இனி அபாயங்கம் இல்லை நீங்கள் ஊர் போங்களென விடைகொடுத்தனுப்பினார்.

இவரது புத்திரன் முதுகில், கழுத்துமுதல் இடுப்புவரை நீண்ட கட்டி ஒரு பெரும் பிலாக்காய்ப் பருமனுள்ளதாக ஏற்பட்டுச் சுமார் ஒரு மாதம் அவஸ்தையடைய இவர் சுவாமிகள் தீர்க்கவேண்டும் மற்ற சிகிச்சை செய்கிறதில்லை என வைராக்கியம் கொண்டிருக்க அது

கண்டு சுவாமிகள் ஓர் இரவு இவரது வீட்டில் வேளார்களைக் கொண்டு கும்பம் வைத்துப் பூஜை செய்யும்படி செய்து அந்த ஜலத்தை அக் கட்டியில் புரோக்ஷித்துவிட்டுப் போக அன்று காலை சுமார் 3 மணிக்குக் கட்டி உடைந்து சுகப்பட்டது.

இன்னும் அன்பர்களிடத்து அநேக அற்புதத் திரு விளையாடல்கள் செய்தும், அவர்களுடைய ஆபத்தில் ஆபத் பாந்தவனாகப் போய் ஆதரித்தும், புத்திரசோகமுள்ள அடியார்களுக்குத் தன் திருவருட் பிரசாதத்தினால் புத்திரபாக்கியம் அடையும்படி செய்தும், அடியார்களின் வீட்டிலுள்ள மாப்பிள்ளைகளுக்கு இன்ன பெண்கள் என்றும் பெண்களுக்கு இன்ன ஆண்களென்றும் சுட்டிக்காட்டி விவாகம் நடந்தேறும்படி செய்வித்தும், அன்பர்களின் அரிய நோய்க்கு மருந்துகொடுத்து அந்நோய் நீங்கும்படி செய்தும் அடியார்களுக்கு ஈடேறும் முறைகளைக் காட்டியும், ஈடேறும்படி செய்தும், அளவற்ற அன்னதானங்களைச்செய்தும், ஞானனந்தமூர்த்தியுமாகியும் "தந்தை தா யாவானும் சார்கதியிங் காவானும் அந்தமிலா வின்பநமக் காவானும்—எந்தனுயிர் தானாகு வானுஞ் சரணாகு வானும் அருட்கோனாகு வானுங் குரு" என்றபடியுமிருந்தார்.

விபவ வருஷம் புரட்டாசி மாதம் 6உ வெள்ளிக் கிழமை சுவாமிகள் இளம்பாடியில் சமாதி யோகம்பண்ணி இதற்கு இரண்டாம் வருஷம் அடக்கம் ஏற்படுமென்றார்கள். பிரமோதூதவருஷ புரட்டாசிமீ 10உ வெள்ளிக் கிழமை காலை மணிக்கு வந்து லக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயிலில் சயனித்திருந்து பின் பகல் 3மணிக்கு காலடிக்கு 13க்கு 13 அடிபோர்ட்டுகிணற்றிற்குமேல் வடக்குப் பக்கம் சமாதி இடம் ஏற்படுத்தி ஒருமுழம் ஆழம் வெட்டும் படி செய்து படுத்துப் பார்த்துப் பக்கத்தில் இரண்டு கணேசர் வைத்துப் பூஜைசெய்தும்மேல்பக்கம் சவுக்கையில் படுத்திருந்தும் மறுநாள் 11உ சனிக்கிழமை பகல் 3மணிக்கு ஸ்ரீநிவாசப்பெருமாள் கோயில் லக்ஷ்மிநாராயணப் பெருமாள் கோயில் இவைகளில் வேளார்களைக் கொண்டு அர்ச்சனைசெய்துகொண்டிருக்கும்படிசெய்து க. இருளப்பக் கோனார், வெங்கடாசலம், அன்னத்தம்மாள் முதலியோர்களுக்கு பிர

சாதம் கொடுத்துவிட்டு இரவு 8 மணிக்குச் சமாதியிடம்வந்து மையும் 4 அடி சன்னச்சதுரம் வெட்டும்படிக்கு கட்டளையிட்டுவிட்டு வண்டி போடும்படி உத்தரவு செய்தார்கள்.

சாமிகூட வந்த அடியார்கள் வண்டிபோட்டுத் தயாரிக்க சுவாமி வண்டியிலேறி சுவாமியே வண்டியை ஓட்டிக்கொண்டுபோகும்போது லாந்தர்இல்லாமல் வண்டிபோனது தெரிந்து க. இருளப்பக் கோனூர் லாந்தர் கொண்டு வண்டிகூடச் செல்ல அன்னத்தாச்சி, வெங்கடாசலம் இவர்களும் தொடர்ந்து செல்ல மடக்கரை செல்லவும் வண்டியை நிறுத்தி வண்டியைவிட்டுக் கீழே இறங்கி மடக்கரை வாய்க்கால் ஜலத்தை ஒரு மட்பாண்டத்தில் கொண்டுவரும்படி செய்து அபிஷேகித்துக்கொண்டு க. இருளப்பக்கோனூர் அவர்களை அங்கே இருக்க வைத்து அவரது இடது புஜத்தில் சுவாமிகள் சாய்ந்து இரவு 3 மணிக்கு நிருவிகற்ப சமாதியானூர்கள்.

க. இருளப்பக் கோனூர் அதைத்தெரியாது நிஷ்டை கூடியிருப்பதாக நினைத்துச் சுமார் 4 நாழிகை வரை இருந்து பார்த்து சமாதி அடைந்த பாவனையாயிருக்கிறதே என்று கூடினவர்களும் தானும் சந்தேகித்து அவிடமிருந்துசுவாமிகளை பல்லக்கில்எழுந்தருளுவித்து இராமலிங்க விலாசம் முன் மண்டபம் சேர்த்தும் சமாதி அடைந்தது நிச்சயப்படாமல் மறுநாள் பகல் 3 மணிக்கு மதுரை பொன்னகரம் யோகாநந்த சுவாமிகளைத் தருவித்துச் சந்தேகம் தெளிந்து சமாதி அடைந்ததை நிச்சயித்து சுவாமிகளிடத்தில் அன்புகூர்ந்த அடியார்களுக்கெல்லாம் தெரிவித்து அன்றிரவு சுவாமிகளுக்கு அந்த முன் மண்டபத்திலே அபிஷேக அலங்கார தீபாராதனைகள் நடத்தி மறுநாள் சோமவாரத்தன்றும் அபிஷேக அலங்கார தீபாராதனைகள் செய்து சுமார் 4 மணிக்குப் புஷ்பப்பல்லக்கில் எழுந்தருளுவித்து அன்புள்ள அடியார்களுடைய பெருங்கூட்டத்துடன் சுவாமிகள் குறிப்பிட்ட இடத்தில் சமாதிகொண்டருளினூர்கள்.

முருகன் துணை.

## ஸ்ரீ கட்டிக்குளம் சுவாமிகள் என வழங்கும்

# சூட்டுக்கோல் மாயாண்டி சுவாமிகள்

பேரில்

மாரியப்ப சுவாமிகள் பாடிய

# பதிகமும், கிளிக்கண்ணியும்.

# ப தி க ம்.

வாயாண்டு கையாண்டு வையகம னைத்தையும்
வாழ்விக்கும் உடலையாண்டு
தாயாண்டு தந்தையாண் டெய்விக்க வந்தகுரு
தெய்வத்தை யாண்டெம்உடனே
நோயாண்ட வெம்மையந் நோய்மாண்டி டச்செய்து
நுகர்ஞான நன்றருளிய
மாயாண்டி யாம்யெம்மை யாண்டசற் குருநாத
வள்ளலே நல்லபொருளே. (1)

எல்லாமு னடிமையே எல்லாமு னுடைமையே
எல்லாமு னுடையசெயலே
அல்லாது வேறொன்று மறியேனெ னப்பெரியர்
ஆய்ந்துரைத் திட்டபடியே
கல்லாத நாயினேன் ஆயினும் நீயெனைக்
கைவிட்டி டாதருளினை
நல்லோர்பு கழ்ந்திடத் தக்கமா யாண்டிகுரு
நாதனே நன்றிமறவேன். (2)

அல்லலற் றன்பதத் தன்புற் றகங்குளிர்ந்
தானந்த சாகரத்தே
எல்லையில் லாதபே ரின்பமுற் றிடமூழ்கி
ஏடேறி னேன்ஆயினும்

நல்லவ ரிணக்கமொடு நின்பூசை நேசமெய்ஞ்
ஞானநன் ஞட்டமகலா
வல்லப மெனக்கருள வேண்டும்மா யாண்டிமுனி
வந்தசற் குருநாதனே. (3)

கண்டதும் கேட்டதும் உண்டுயிர்த் ததுமலாற்
கனவிலும் உன்புகழைநான்
விண்டது மிலேவிண்டி டுந்தொண்டர் தம்பக்க
மேவவு மிலேயாயினும்
பண்டுநான் செய்தநற் பயனோ அறிந்திலேன்
பாலித் தருள்புரிந்தாய்
ஆண்டர்போற் றுந்தண்ட பாணியாய் வந்தமா
யாண்டிசற் குருநாதனே. (4)

குவியா மனத்தனைக் குணமிலாப் பித்தனைக்
கோதிலா நின்பதத்தே
கவியாத சித்தனைக் கசடனை னைக்கை
கலந்திருள் களைந்து இகமே
அவியாவி ளக்கென லென்ஞசா னைனத்தோன்றி
யாண்டபர மானந்தமே
புவிராஜ ரும்நல்ல தவராஜ ருந்தினம்
போற்றுமா யாண்டிகுருவே. (5)

நான்பெற்ற பேறெலாம் நீபெற்ற தேயென்று
நாட்டும்நல் லறிவகன்றால்
நோன்புற்றும் ஒருபயனு மில்லையத னுனது
நுட்பமிகும் நல்லருளினால்
தான்பெற்ற தெய்வமும் குருவுமெய்த் தந்தையும்
தாயுமாய்த் தற்காத்தருள்
வான்பெற்ற மாமலைக் கூடல்வளர் சித்தனே
மாயாண்டி யாம்கர்த்தனே. (6)

ஐங்கரனும் நீஆறு மாமுகனும் நீஅம்மை
ஆதிபர மேஸ்வரியும்நீ
சங்கரனும் நீசங்கு சக்ரதர னுடையன்
தார்ந்ததெய் வங்களும்நீ

எங்கணும் நின்மயம தாய்க்கண்ட காட்சியே
யென்னைவிட் டகலா தருள்
மங்களந் தருதிருக் கூடல்மலை வளருமா
யாண்டிகுரு நாதமணியே. (7)

சந்ததமும் நின்பதத் தன்பிலே ஞயினும்
தற்பரா நின்கருணையால்
மைந்தனென் குடிமுழுதும் ஆட்கொண்ட வள்ளலே
வந்தித் திடுந்தொண்டர்தம்
பந்துவே நின்பெருமை சாற்றவல் லாரெவர்
பாரில்நின் பாதமறவா
தொந்தமும் சகலநற் சுகமுமீய்ந் தருள்பரி
சுத்தமா யாண்டிகுருவே. (8)

ஆதியா யியமத்தி யந்தமா யியும்அற்பு
தானந்த மூர்த்தியாகி
ஜோதியா கியபரஞ் சுடரேஇவ் வுலகந்
துதிக்கமா ணிடவடிவமாய்
ஜாதிசம யம்மதம் பேதமற் றிடுபறை
சாற்றிநன் மார்க்கமுறவே
நீதியா யெழில்மிகுங் கூடல்மா மலையருள்
நின்றமா யாண்டிகுருவே. (9)

காலன் றனக்கஞ்சி டாநெஞ்ச முங்கால
காலனார் தம்புத்திரன்
சீலந் தருங்குகன் சேவடிக் கேஉடல்
சேர்ந்தபொரு ளாவிமூன்றும்
பாலனம் செய்யபரி பாலித் தருள்பரம
பக்திமெய்ஞ் ஞானமுடனே
கோலம் விளைத்தெழிற் கூடல்மலை மேவிக்
குலாவுமா யாண்டிகுருவே. (10)

# கிளிக்கண்ணி.

ஆதியாம் குருவேஇந்த அகிலம் படைத்துக்காக்கும்
நீதியாம் தெய்வமதைக் கிளியே
நிலைநிறுத்த வந்தகுரு. (1)

பேயாண்டி யெனப்பல பித்தர் பிதற்றிடினும்
மாயாண்டி யெனப்பேர்கொண்டு கிளியே
இந்தவையம்வாழ வந்தகுரு. (2)

சிறியவர் இகழ்ந்திடினும் சிந்தையிற்கொள் ளாமல்நன்றே
அறிபவர்க்கா னந்தம்தரும் கிளியே
அருள்நிறைந்த யெங்கள்குரு. (3)

யாவும்தா னாயிருந்தும் ஆண்டதெய்வ மாயிருந்தும்
ஜீவகா ருண்யமதை கிளியே
சிறப்பிக்க வந்தகுரு. (4)

வாட்டும் பசியோடெதிர் வரும்உயிர் வர்க்கங்களை
கூட்டிஅ ணைத்துஅமுதை கிளியே
குணமாய்க்கொ டுத்தகுரு. (5)

தாரணி அடைந்ததுயர் தானே அடைந்ததென
காரணம் காட்டிப்பின்னும் கிளியே
கவலையை மாற்றும்குரு. (6)

எல்லாமும் அல்லவுமாய் இருந்தாலும் இருந்ததை
சொல்லாமல் சொன்னகுரு கிளியே
தொண்டுதொட்டே வந்தகுரு. (7)

சத்துவ குணம்நிறைந்த சன்மார்க்கர் தான்மகிழும்
சித்துக்கள் யாவும்செய்து கிளியே
ஜெகமய மானகுரு. (8)

நம்பும் அடியவர்க்கே நன்மை யளிக்கும்திரு
நம்பிரா னாகவந்தே கிளியே
தனையபுரிந் தாண்டகுரு. (9)

உலகம் பலவிதமாய் ஒன்றேடொன் றாமுறனாய்
கலகம் விளைப்பதெல்லாம் — கிளியே
கண்டுநகை கொண்டகுரு. (10)

அன்பும்தெய் வமும்இரண் டல்லஒன் றுமெனவே
இன்பவுப தேசம்செய்த — கிளியே
எங்கள்மா யாண்டிகுரு. (11)

தாயும்தந் தையும்குரு தான்பெற்ற தெய்வமுமாய்
சேய்போல் திரிந்ததெல்லாம் — கிளியே
திருவிளை யாட்டல்லவோ. (12)

தொண்டுசெய் திட்டவர்க்கு தொலையும் பவங்களெல்லாம்
கண்டவர்க்கா னந்தம்தரும் — கிளியே
கட்டழகன் பேருருவம். (13)

எங்குந் திருவருளோ டியங்குமென் குருநாதன்
தங்கும் இடங்களெல்லாம் — கிளியே
தணியர சாட்சியடி. (14)

வந்த பிணியகலும் வையக முப்புகழும்
சிந்தையுடன் சேவடியை — கிளியே
சேர்ந்து சுகிப்பவர்க்கு. (15)

அழியாநல் வரந்தந்து ஆண்டபர மானந்த
வழியும் வழித்துணையும் — கிளியே
மாயாண்டி யாம்குருவே. (16)